**குருநாகல் பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு குருணாகல் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய ரூபா. 3,509,630 பெறுமதியான நிலையான வைப்புகளின் வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடன் கொடுனர்கள் மற்றும் மூலதனச் செலவினங்கள் ரூபா.9,334,621 இனால் நிதிக் கூற்றுகளில் அதிகமாக காட்டப்பட்டிருந்தது.

(இ) அட்டுறு ஓய்வூதியம் ரூபா. 1,337,440 கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஈ) பல்வேறு தொழில் கடன்கொடுத்தோர் ஆரம்ப மீதி ருபா. 23,013,000 இனால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(உ) வெல்லவ ஈ-நூலகத்தில் ரூபா. 925,284 ஆன கட்டிடங்களின் பெறுமதி கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஊ) சபைக்குச் சொந்தமான ரூபா. 22,451,00 பெறுமதியுடைய 17 காணிகள் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் ரூபா. 22,451,000 ஆன 3 காணிகள் இரண்டு தடவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(எ) மாஸ்பொத மயான பூமிக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா. 1,080,975 பெறுமதியான மின்பிறப்பாக்கி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) ரூபா. 755,500 பெறுமதியான கணணி உபகரனங்களை ருபா. 75,550 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) சபைக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிலொன்றின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணங்களிற்காக கணக்குகளில் நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டின் இறுதியில் வியாபாரக் கடன்பட்டோர் ரூபா. 300,000 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) நன்கொடையாக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா. 503,697 பெறுமதியான கணிணி உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(க) 2015 ஆம் ஆண்டின் ரூபா. 168,447 பெறுமதியான மின் களஞ்சியத்தின் இறுதித் தொகையில் கணக்கீட்டு பிழையை சீர் செய்யும் போது ரூபா. 336,894 ஆக மின் களஞ்சிய இருப்பு குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுகளுக்கமைய 11 கணக்குப் விடயங்களின் மீதி, அட்டவணைகள் மற்றும் பேரேடுகளின் அடிப்படையில் மீதிகளோடு ஒப்பிடுகையில் ரூபா. 110,518,649 வித்தியாசம் காணப்பட்டது.

**1.3.3 தொங்கல் கணக்கு**

நிதி நிலைமை கூற்றுகளின் நடைமுறைப் பொறுப்புக்களில் ரூபா. 169,855,860 ஆன நிச்சயமற்ற மீதி காணப்பட்டது.

**1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா. 385,557,687 பெற வேண்டிய கணக்கு மீதிகளில் ஒரு வருடத்தை தாண்டியும் தீர்கப்படாதிருந்த மீதி ரூபா. 246,468,317 ஆக காணப்பட்டது.

(ii) வேறு நிறுவனங்களில் வைப்புகள் / முன்னேற்றங்களாக காட்டப்பட்டுள்ள ரூபா 1,194,618 மற்றும் தொழிற்சங்கமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 100,000 தொகையோடு வட்டியையும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா. 282,809,804 செலுத்த வேண்டிய மீதிகளில் ஒரு வருடத்தை தாண்டியும் தீர்கப்படாதிருந்த மீதி ரூபா. 246,468,317 ஆக காணப்பட்டது.

(ii) ரூபா. 230,987,398 இற்கான கடன் கொடுத்தோருக்கான காலப் பகுப்பாய்வை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாததால் மொத்தம் ரூபா. 4,370,036 ஆன 10 கணக்குப் விடயங்களை கணக்காய்வு செய்யும்போது திருப்திகரமாக சரிபார்க்க முடியவில்லை.

(ii) நிலையான சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் முறையே ரூபா. 89,717,385 மற்றும் ரூபா. 4,370,036 நாற்குறிப்புகள் மூலம் முற்பணத் தொகையை சீராக்கம் செய்வதற்கான அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள்˙ மற்றும் முகாமைத்துவ தீர்மானங்ககளுடன் தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | |
| (i) நிதிப்பிரமாணம் 571(2) மற்றும் 571 | 512,375 | 02 ஆண்டுகளை மிகைத்த 143 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 1645 மற்றும் 1646 | 709,380 | 16 வாகனங்களின் ஓட்டக் குறிப்பக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை |
| (ஆ) 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | சபை வாகனங்களில் அரச இலட்சணையுடன் உள்ளுராட்சி மன்றத்தின் பெயர் பொறிக்கப் பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 202,247,275 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரோத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 124,733,524ஆக காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 பட்டியலிட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2016 பட்டியலிட்ட வருமானம் | 2016 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2016 திசெம்பர் 31 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 11,420 | 13,715 | 13,411 | 24,728 | 11,205 | 10,911 | 10,368 | 10,336 |
| (ii) | வாடகை | 2,700 | 1,864 | 1,886 | 10 | 1,121 | 1,325 | 1,484 | 32 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 1,650 | 2,513 | 803 | 1,007 | 1,588 | 1,797 | 1,797 | 261 |
| (iv) | ஏனைய வருமானம் | 171,397 | 283,252 | 169,269 | 251,246 | 133,204 | 220,406 | 95,455 | 229,329 |
| | மொத்தம் | 187,167 | 301,344 | 185,369 | 276,991 | 147,118 | 234,439 | 109,104 | 239,958 |

குறிப்பு

2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் முன்னைய ஆண்டிற்குரியதாக அறவிடப்பட்ட ரூபா 114 மில்லியன் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட் ரூபா. 301 மில்லியன் வருமானம் மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா. 185 மில்லியனாக இருந்ததோடு முன்னைய ஆண்டுகளின் நிலுவைகளோடு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா. 277 மில்லியன் மேலும் அறவடப்படவேண்டி இருந்தது. எனினும் வருமான நிர்வாகம் தொடர்பாக சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட பெறுமதிகள் மற்றும் நிதிக்கூற்றுகளின் பெறுமதிகளுக்கிடையில் வேறுபாடு காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு பெற்றிருக்க வேண்டிய ரூபா. 24,727,685 ஆன வரிப்பணம் மற்றும் ஏக்கர் வரியில் ரூபா. 12,116,119 நிலுவை மீதி 03 வருடங்களைத் தான்டியிருந்தது.

(ஆ) வீதவரி மற்றும் வரி நிலுவையில் அறவீடு நூற்றுக்கு 68 வீதமாகவும் பட்டியலிடும்போது அறவீடு நூற்றுக்கு 58 வீதமாகவும் காணப்பட்டதோடு, 2017 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு வரிப்பண நிலுவை ரூபா. 24,727,685 ஆக காணப்பட்டது.

### 2.2.4 குத்தகை வாடகை

மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட ரூபா. 1,864,000 குத்தகை வாடகை மொத்தமாக கிடைக்கப் பெற்றிருந்ததோடு, வருடத்தின் ஆரம்ப நிலுவையில் ரூபா. 10,000 அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களும் முறையே ரூபா 8,569,415 ரூபா 231,729,437 ஆக இருந்தன.

## 03 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதி மற்றும் 570/7 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவத்தலின் மூலம் விதிக்கப்பட்டிருந்த உபவிதிகள் மற்றம் மாகாண சபையால் பிறப்பிக்கப்பட்ட உப விதிகளும் பின்பற்றப்பட்டிருந்தன.

#### (ஆ) நிதி ஏற்பாடு கிடைக்காமை

வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் மானியங்கள் ஏற்பாடு செய்யப்படாத ரூபா. 14,404,536 பெறுமதியான 39 நிர்மாணங்கள் மீளாய்வாண்டிற்குள் நிறைவேற்றப்பட்டிருந்தது.

#### (இ) கைவிடப்பட்ட வேலைத் திட்டங்கள்

மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா. 81,000,000 பெறுமதியான 4 தொழில்கள் மீளாய்வாண்டிற்குள் ஆரம்பிக்கப்படாதிருந்தது.

#### ( ஈ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத் திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மானியம் ரூபா. 490,000 இலிருந்து ரூபா. 8,865 தொகை மாத்திரம் செலவழிக்கப்பட்டிருந்தது.

(ii) 2016 ஆம் ஆண்டில் ரூபா. 2,396,728 செலவழிக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட உக்காத கழிவை வகைப்படுத்தும் நிலையம் 2018 ஜுலை 11 ஆம் திகதியானபோதும் செயலற்ற நிலையில் காணப்பட்டது. மேலும், இந்த நிலையத்திற்கு நீர் மற்றும் மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### (உ) சுற்றாடல் பிரச்சினைகள்

சுற்றாடல் பிரச்சினைகள் காரணமாக 06 தொழில்களுக்கு மீளாய்வாண்டிற்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருக்கவில்லை. எனினும் மக்களின் வறுமையை ஒழிப்பதற்கு நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன.டெங்கு நுளம்புகளில்லாத மாதிரி பாடசாலைகளை தெரிவு செய்யும் நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும், அதற்காக மீளாய்வாண்டின் பாதீட்டுத் திட்டத்தினூடாக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா. 100,000 மானியத் தொகை முழுமையாக மீதமாகியிருந்தது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திரகம பல்நோக்கு கட்டிடத்தின் பெறுமதி மதிப்பீடு செய்துகொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2 நிர்மாணங்களுக்கு அதிகமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா. 101,196 மறுபடியும் அறவிடப்பட்டிருந்த போதிலும், சரியாக அளவீடுகளை எடுக்காமை, உடன்படிக்கை செய்யப்பட்ட விலைகளை பயன்படுத்தாமை போன்ற விடயங்களால் தவறான செலவினங்களை செய்வதற்கான அறிக்கைகளை ஒழுங்குபடுத்துதல், பரிந்துரை செய்தல் மற்றும் அங்கீகரிக்கப்படுதல் போன்ற செயல்களை செய்யும் உத்தியோகத்தர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

(அ) ஊழியர் வெற்றிடங்கள்

சபையின் 12 பதவிகளுக்கு தொடர்பான 33 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) ஊழியர் கடன்

சேவையை விட்டு செல்லுதல் மற்றும் இறப்பு காரணமாக இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 89,815 அறவிட்டிருக்கவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரிய 71 மயான காணிகளில் 70 காணிகள் சபையினால் கையேற்பதற்பு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததோடு அக் காணிகளில் தேவையான அபிவிருத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆண்டு செயற்றிட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்படடிருந்த 5 சிகிச்சை நிலையங்கள் சபையினால் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 செயலற்ற / பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

சபையில் இருந்தும் சபையினால் கையேற்கப்படாத கல்ரோல் ஒன்று 03 வருட காலமாக செயளற்ற நிலையில் காணப்பட்டது.

## 3.5 பெறுகை

### 3.5.1 விநியோகங்கள் மற்றும் சேவைகள்

பெறுகை வழிகாட்டல் கோவையின் சட்டங்கள் கூறு விலைகளை பெற்றுக்கொள்ளாது ரூபா. 144,154 கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

# 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

ஊழியர் நலன்புரி மற்றும் செயற்திறனை மேமம்படுத்துதல், 10 சமூக நலன் புரி நடவடிக்கைகள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா. 3,400,000 மானியம் முழுமையாக எஞசியிருந்தது.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு அறிக்கைளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

# 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமை | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) கணக்குப் புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை புதுப்பித்து பராமரிக்காதிருந்தமை.<br>(ii) நிதிக்கூற்றுகளுடன் பிரதி ஆவணங்களை சமர்ப்பிக்காமை.<br>(iii) பீ.எஸ். 19 அறிக்கையை தயாரிக்கப்படாமை |
| (ஆ) வருமான முகாமைத்துவம் | (i) நிலுவை வருமானங்களை அறவிடுவதில் பலவீனங்கள்.<br>(ii) நிலுவை வருமான அறிக்கையொன்றை தயாரிக்காமை.<br>(iii) முச்சக்கர வண்டி வருமானங்கள் அறவிடப்படாமை. |
| (இ) கொள்வனவு செயல்முறை | சகல கொள்வனவுகளையும் பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை. |
| (ஈ) ஒப்பந்த நிர்வாகம் | முறையற்ற செலவினங்களை செய்துள்ளமை. |